# நடப்பு நிகழ்வுகள்- ஜனவரி 30 - 2017

- மகாத்மா காந்தி 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் மாலை 5.17 மணி அளவில் டில்லி பிர்லா மாளிகை காந்தி சமிதி தோட்டத்தில் நாதுராம் கோட்ஸே என்பவனால் சுட்டுக்கெலை செய்யப்பட்ட தினம்.
- தேசிய தியாகிகள் தினம் - ஜனவரி – 30 (மஹாத்மா காந்தி மறைந்த தினம்)
- ஷேக்ஸ்பியரின் புகழ்பெற்ற "ரோமியோ ஜூலியட்" நாடகம் முதன் முதலாக அரங்கேறிய தினம் ஜனவரி – 30.
- ஆஸ்திரேலியரின் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் ஸ்பெயினின் ர.ஃபேல் நாடலை தோற்கடித்து சாம்பியன் பட்டம் பெற்றார். இந்த வெற்றியின் மூலம் ஆஸ்திரேலிய ஓப்பனில் 5 ஆவது பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.
- பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் நடைபெற்ற ஏனாமைச் சேர்ந்த ராணுவ வீரர் ஓலேட்டி லட்சுமி வீர தீரச் செயலுக்கான சேனா விருது குடியரசு தின விழாவில் வழங்கப்பட்டது.
- புதுச்சேரியில் திருவாண்டார் கோயில் நவ துர்கா மேல்நிலைப்பள்ளிக்கு சிறந்த பள்ளிக்கான முதலமைச்சர் விருதை கிரண்பேடி வழங்கினார்.
- குடியரசு தலைவரின் பாலஸ்ரீ விருதுக்கு நாமக்கல் ஜவகர் சிறுவர் மன்ற மாணவி எஸ்.பி.மதுரிதா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ஜி.எ.எ.ஆர் எனப்படும் பொது வரி ஏய்ப்பு தடுப்பு சட்ட விதிகள் வரும் ஏப்ரல் – 1 முதல் நடைமுறைக்கு வருகின்றன.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11, 12 – ம் வகுப்புகளில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவருக்கும் "அம்மா கிட்ஸ்" எனப்படும் கணிதம் மற்றும் அறிவியலுக்கான உபகரணங்கள் வழங்கப்படும் என தமிழக அரசு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.
- தொழில் முறை குத்துச்சண்டையில் இந்திய வீராங்கனை பிங்கி ஜங்ரா வெற்றி பெற்றுள்ளார்.

- விண்வெளிப் பயணங்களால் மனிதர்களின் மரபணு அளவில் மாறுபாடு ஏற்பட வாய்ப்பிருப்பதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா தெரிவித்துள்ளது.
- தென்னாப்பிரிக்காவின் சுற்றுலாவை மேம்படுத்த “ஒவ்வொரு நொடியும் ஆச்சரியம்” எனற தலைப்பில் சென்னை, பெங்களூரு, தில்லி, மும்பை ஆகிய நகரங்களில் சுற்றுலா கண்காட்சியை அந்நாட்டு சுற்றுலாக் குழு நடத்தி வருகிறது.
- “சிறிது நேரம் மனிதராயிருந்தவன்” எனும் பெயரில் வைரமுத்து தமிழில் எழுதி சிறுகதை தொகுப்பை கே.எஸ். வேங்கடாசலம் என்பவர் மலையாலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.
- சென்னையில் நடைபெற்ற சையது முஷ்டாக் அலி டி 20 கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணியை தோற்கடித்து தமிழக அணி வெற்றி பெற்றது.
- குாந்தி கிராம பல்கலை மாணவர் சேர்க்கையில் “திருநங்கைகளுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு” வழங்க மத்திய அரசுக்கு பரிந்துறை செள்ளப்பட்டுள்ளது என துணைவேந்தர் நடராஜன் தெரிவித்துள்ளார்.
- தேசிய தொழுநோய் ஒழிப்பு தினம் - ஜனவரி 30. இவ்வாண்டு தேசிய அளசில் “ஸ்பார்ஸ் திட்டம்” (Sparsh Campaign) எனும் பெயரில் தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன.
- “ஒலிம்பிக் இலக்கு மேடை” (Target Olympic Podium (TOP)) எனும் பெயரில் 2020 மற்றும் 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கான வீரர்களை தெரிவு செய்யும் குழவின் தலைவராக அபினவ் பிந்த்ரா (Abhinav Bindra) நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய தபால் பேமண்ட் வங்கியின் (India Post Payment (IPPB)) இடைக்கால மேலாண் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக A.P.சிங் (A.P.Singh) நியமிக்கப்பட்டுள்ளார்.
- உலகிலேயே முதல் முறையாக “டிஜிட்டல் தூதுவரை” (Digital ambassador) நியமித்துள்ள நாடு – டென்மார்க்.
- வட கிழக்கு திரைப்பட விழா (North East Film Festivel) மஹாராஷ்டிராவின் பூனே நகரில் நடைபெற்றது.